Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 173 of 2024

DATE : 20.05.2025

Depositions of witness for Prosecution

PW : 7

| | | | |
|---|---|---|---|
| Name | திருப்பதி | Caste | |
| Father/Husband's Name | சங்கையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2025

**(எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை : –**

1) நான் அயன்கரிசல்குளத்தில் வசித்து வருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த இரண்டு வருடத்திற்கு முன்பு தேதி, மாதம், ஞாபகம் இல்லை. அ.சா.1 அவரது கடைக்கு கிழக்கு பக்கமாக நிறுத்தி வைத்திருந்த டாடா சுமோவை காணவில்லை என்று நத்தம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். காவல் துறையினர்கள் காணாமல் போன டாடா சுமோவை எடுத்த நபர்களை பார்வையிட அழகாபுரி மற்றும் அனுகிரகா ஹோட்டல் ஆகிய இடங்களில் உள்ள சிசிடிவி கேமராவை ஆய்வு செய்தார்கள். சுப்புலாபுரம் சோதனை சாவடியில் காணாமல் போன டாடா சுமோ யாரோ நபர்கள் எடுத்து போவதாக தெரிந்தது. அதனுடன் ஒரு நபர் ஒரு ஸ்கூட்டர் எடுத்து செல்வதாக பார்த்தோம். மதுரை சிந்தாமணி டோல்கேட் வரை காவல் துறையினர்களுடன் நானும் சென்று பார்த்தேன். அங்கு ஓட்டி வந்த ஸ்கூட்டரை மட்டும் டோல்கேட்டில் நிறுத்திவிட்டு சுமோவுடன் மதுரையை தாண்டி சென்றுவிட்டார்கள். மறுநாள் அந்த நிறுத்தி வைத்திருந்த ஸ்கூட்டரை எடுப்பதற்கு திருடிய நபர்கள் வருவார் என்று கூறியதன் அடிப்படையில் நானும் காவல் துறையினரும் காரில் சென்று அந்த ஸ்கூட்டரை நோட்டம் விட்டுக்கொண்டிருந்தோம். மாலை 6 மணிக்கு ஒரு நபர் அந்த ஸ்கூட்டரை எடுக்க வந்தார் இரண்டு நபர்களை அப்போது போலீஸ்காரர் பிடித்துவிட்டார்கள். அந்த நபர்கள் ஆஜர் எதிரிகள் தான். அவர்களை எனது அண்ணன் மற்றும் என்ன முன்னிலையிலும் காவல் துறையினர்கள் விசாரித்தார்கள். விசாரித்ததில் எதிரிகள் டாடா சுமோவை சென்னையில் விற்றுவிட்டதாக சொன்னார்கள். 1ம் எதிரி பால்டேனி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது

அண்ணன் மாரிச்சாமி கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. **அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 2ம் எதிரி சங்கர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது அண்ணன் மாரிச்சாமி கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. **அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின்பு சம்பவ இடத்தில் வைத்து ஸ்கூட்டரை அத்தாட்சி மூலம் கைப்பற்றினார்கள். அதில் நானும் மாரிச்சாமியும் கையெழுத்து செய்தோம். **அந்த அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின்பு எதிரியுடன் நாங்கள் வந்த காருடன் மற்றும் போலீசாருடன் சென்னை சென்றோம். அங்கு டாடா சுமோவை 40,000 ரூபாய்க்கு 3ம் எதிரி மோகன் பாபுவிடம் விற்றுவிட்டதாக சொன்னார்கள். அதன் பின்பு மோகன் பாபுவை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் வழங்கினார். அதன் ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆஜர் 1, 2 எதிரிகளிடம் விலைக்கு வாங்கியதாக ஒப்புக்கொண்டார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது அண்ணனும் கையெழுத்து செய்தோம். **அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் பின்பு சம்பவ இடத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார். அத்தாட்சியில் நானும் மாரிச்சாமியும் கையெழுத்து செய்தோம். **அந்த அத்தாட்சி அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி மற்றம் சொத்துக்களுடன் நத்தம்பட்டி காவல் நிலையத்திற்கு வந்தோம். சார்பு ஆய்வாளர் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) ஆஜர் எதிரிகளை எப்போது தெரியும் என்றால் வாகனம் திருடு போனதற்கு பின்பு தான் தெரியும், தேதி, மாதம் ஞாபகம் இல்லை. புகார் மனு எப்போது கொடுக்கப்பட்டது என்றால் தேதி, மாதம், வருடம் எனக்கு ஞாபகம் இல்லை. சிசிடிவி காட்சி பதிவுகளை எப்போது பார்த்தேன் என்றால் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சிசிடிவி காட்சி பதிவுகளை அனுகிரகா ஹோட்டல் மற்றும் அழகாபுரி சோதனை சாவடி மற்றும் சுப்புலாபுரம் சோதனை சாவடி, திருமங்கலம் டோல்கேட்டிலும் பார்த்தேன். நானும் எனது அண்ணன் மாரிச்சாமியும் மற்றும் நான்கு போலீசார்கள் உடன் இருந்தார்கள். சிசிடிவி காட்சி பதிவுகளை பார்வையிடும் போது அ.சா.1 மற்றும் அ.சா.2 உடன் இருந்தார்களா என்றால்இல்லை. சிசிடிவி காட்சி பதிவுகளை நானும், அ.சா1ம், அ.சா.2ம் நேரில் சென்று பார்க்கவில்லை என்றும் போலீசார்கள் தான் தெளிவில்லாத சிசிடிவி காட்சிகளை எங்களிடம் காண்பித்தார்கள் என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சிசிடிவி காட்சிகள் நான் பார்த்த இருசக்கர வாகனத்தின் எண் தெரியுமா என்றால் இருட்டில் வந்து கொண்டிருந்ததால் தெரியவில்லை ஆனால் வாகனத்தின் கலர் புளூ. சிசிடிவி காட்சிகளை பார்க்க நான் சென்ற வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. சிசிடிவி பதிவுகள் நான் பார்த்த தேதியும் மறுநாள் எடுக்க சென்ற தேதியும் எனக்கு தெரியுமா என்றால்ஞாபகம் இல்லை. சிந்தாமணி டோல்கேட்டில் மேற்படி இருசக்கர வாகனம் நிறுத்தப்படவில்லை என்றும் போலீசார்

கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை எப்போது எங்கே வைத்து வாங்கினார்கள் என்றால் சிந்தாமணி டோல்கேட்டில்வைத்து வாங்கினார்கள் நாள், மாதம், நேரம், வருடம் ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் போலீசார்கள் ஆஜர் எதிரிகளை மிரட்டி ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரிகளிடமிருந்து போலீசார்கள் என்ன கைப்பற்றினார்கள் என்றால் வாகனத்தை கைப்பற்றினார்கள் அதன் பதிவு எண் ஞாபகம் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும் போது எனது அண்ணனும் உடன் இருந்தார். போலீசார் என்னை சிந்தாமணி டோல்கேட்டிலும், சென்னையிலும், காவல் நிலையத்திலும் வைத்து விசாரித்தார்கள் எப்போது விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. போலீசார் விசாரணையில் நான் சொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக போலீசாரால் உற்பத்தி செய்யப்பட்டவை என்றும் அதன் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு